பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 28 ஞாயிற்றுக்கிழமை 14.11.2021 கதிர் 237

## புத்தளத்தில் வீதி விபத்தில் ஒருவர் சாவு; மூவர் காயம்

புத்தளம் கருவலகஸ்வெவ பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன், சிறுவன் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

வென்னப்புவ, லுணுவில, ரோஸ் மரியவத்தையைச் சேர்ந்த 74 வயதுடைய மூன்று ☞2

# தமிழர் நினைவு நாளை ஒரு மதத்தவர்கள் தீர்மானிப்பதை எப்படி அனுமதிக்கலாம்?

## கேள்வி எழுப்புகின்றார் கலாநிதி ஆறு. திருமுருகன்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர்14

தமிழர்களின் நினைவு நாளை – பிரார்த்தனைநாளை–ஒருமதத்தவர்கள் எவ்வாறு தனித்துத் தீர்மானிக்க முடியும் என துர்க்கா தேவி தேவஸ்தா னத்தில் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அளவையூர் தத்துவஞானி கைலாசபதி அரங்கில் இன்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்தின் சேவை நயப்பு விழாவில் ☞2

## அரசிலிருந்து வெளியேற சமசமாஜிகள் தயாராம்!

### தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் பிரதான கூட்டணிக் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் ☞2

## ஐ.நா. தேர்வில் இலங்கைக்கு படு தோல்வி!

### முன்னாள் சட்டமா அதிபரும் பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸை நிராகரித்தன சர்வதேச நாடுகள்



நியூயோர்க்,நவம்பர்14

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணைக் குழுவுக்கு இலங்கையின் சார்பில் பரிந்துரைசெய்யப்பட்டிருந்த முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியான மொஹான் பீரிஸ், ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை சார்பில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 2008 – 2011 ஆம் ஆண்டு வரையான ☞2

## கிளிநொச்சி வாள் வெட்டு; இரு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி - கோரக்கன் காட்டுப் பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் முன்னெடுத்துள்ளனர் என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பகுதியில் நேற்று முன்தினம் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் மீது கார் ஒன்றில் வந்த குழுவினர் வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். ☞2

## மன்னார் பிரதேச சபையின் தவிசாளரை பதவி நீக்கிய வர்த்தமானி அறிவிப்பு ரத்து

### புதிய அறிவிப்பை வெளியிட்டார் புதிய ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ.14

மன்னார் பிரதேச சபையின் தவிசாளராக இருந்த சாகுல் ஹமீத் முஜாஹிரை தவிசாளர் பதவியில் இருந்தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் விலக்கி, கடந்த செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி வர்த்தமானி மூலம் அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் விடுத்த அறிவிப்பை, கடந்த 10ஆம் ☞2

## பட்ஜெட்டை ஆதரிப்பதா? இல்லையா? பங்காளிக் கட்சிகள் நாளை கூடி முடிவு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? - என்பது குறித்து பங்காளிக் கட்சிகள் மந்திராலோசனையில் ஈடுபட்டுள்ளன என தென்னிலங்கை ஊடகம் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, ஆளும் அரசாங்கத் தரப்பிற்குள் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ள 11 சிறு கட்சிகள், நாளை 15ஆம் திகதி எரிசக்தி ☞2

## மன்னாரில் இரு தடுப்பூசிகளை ஏற்றியோர் மட்டுமே நாளை முதல் பொது நடவடிக்கைகளில் ஈடுபடலாம்

### வியாபார நிலையங்கள், சந்தைகளில் பணியாற்றக் கட்டுப்பாடு



மன்னார் மாவட்டத்தில் கொரோனாவுக்கான இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொண்டவர்கள் மாத்திரமே, நாளை திங்கட்கிழமை முதல் வியாபார நிலையங்கள், சந்தைகள், பொதுப் போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றை நடத்தி செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ☞2

## முப்பது முன்னாள் எம்.பிக்களுக்கு இன்னும் மெய்க்காவலர்கள் எதற்கு?

### அரச தரப்புக்குள் இப்படி அதிருப்தி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 30 பேருக்குக் கடந்த 15 மாதங்களாக உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயம் அரசுக்குள் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமைச்சர் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழர் நினைவுநாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்து மக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டவர்கள். நாங்கள் படிக்கின்ற காலத்தில் கிறிஸ்தவ நண்பர்களோடு சேர்ந்து பழகி, ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நான் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போது என்னை முதன்முதலில் நேரடியாக வந்து வாழ்த்தியவர் தற்போது யாழ் மாவட்ட ஆயராக உள்ள ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள. அவ்வாறு நாங்கள் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். ஆனால் தற்போது ஒரு பிரச்சினை எழுந்துள்ளது.

கிறிஸ்தவ மதத்தில் பல சபைகளை உருவாக்கித் தமது மதத்துக்கு மதம் மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து மத மாற்றம் செய்வதை முன்னெடுக்கிறார்கள். அது ஏற்கக் கூடிய ஒரு விடயமல்ல.

தமிழர்களின் அதிகமானோர் கண்ணீரோடு நிற்க கிறிஸ்தவர்களோ அதிக சபைகள் உருவாக்கி, பணத்தோடு செல்கின்றனர்.

ஆனால் நாம் எந்தக் காலத்திலும் எந்த கிறிஸ்தவர்களது வீட்டிற்கோ, இஸ்லாமியரது வீட்டிற்கோ சென்று சைவ சமயத்துக்கு வாருங்கள் என அழைக்கவில்லை. ஆனால் தற்போது இந்துக்களை இஸ்லாமியர்களும் குறி வைக்கின்றனர். அதனைப் பத்திரிகையில வரும் பெயர் மாற்றங்களே உறுதி செய்யும். அதற்கும் அப்பால் கிறிஸ்தவர்கள் வீடு வீடாகச் சென்று சமயத்துக்கு ஆள் சேர்க்கும் பணியையும் மேற்கொள்கின்றனர் என்பதனையும் ஏற்க வேண்டும். நாங்கள் இந்துக்கள் எப்போதாவது எமது மதத்திற்கு மதம் மாற வேண்டும் என்று எங்காவது கேட்டிருக்கின்றோமா? நாங்கள் கேட்க மாட்டோம்.

அதேபோலவே ஒட்டுமொத்த தமிழர்களின் திருநாளை ஏனைய மதத்தவர்களை புறந்தள்ளிவிட்டு ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எவ்வாறு தீர்மானிக்க முடியும்?

ஏனைய மதத்தவர்களோடு கலந்துரையாடாது ஒரு மதத்தவர்கள் மாத்திரம் எடுத்த முடிவினை ஏனையவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

தமிழர்களின் திருநாளை தமிழர்களில் எண்பது வீதமானவர்களை ஓரம் கட்டி எஞ்சிய இருபது வீதமானோரைக் கொண்டுள்ள ஒரு மதத்தவர்கள் மட்டும் பொது நிலைப்பாடாகத் தீர்மானித்தமையினை எவ்வாறு ஏற்பது?

தமிழர்கள் திருநாளாக - நினைவு நாளாக - கடைப்பிடிக்கும் ஒரு தினத்தை, மாற்றி அமைக்கும் முடிவைக் கூட நீங்கள் தனித்து எடுத்து அறிவித்தால் நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது. ஏன் ஏனைய மதத்தவர்களோடு கலந்துரையாடவில்லை?

இவ்வாறு பல விடயங்களை நேரடியாகவே கூறலாம். சைவ சமயத்தவர்களிற்கும் பிரச்சினை எழுகின்றது என்பதனை ஏற்க வேண்டும்.

இந்துக்கள் கிறிஸ்தவ மக்களுக்கோ, கிறிஸ்தவ துறவிகளுக்கோ எதிரானவர்களல்லர். நாங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். இந்துக்களாகிய நாம் எந்த மதத்தவர்களோடும் சண்டை பிடிக்கப் போவதில்லை. ஆனால் நமக்கு ஒரு தாக்கம் ஏற்படும் போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதானே. - எனவும் தெரிவித்தார்.

## அரசிலிருந்து ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கத்தின் மக்கள் விரோத செயல்கள் குறித்து அரசாங்கத்துக்குள் கலந்துரையாட சந்தர்ப்பத்தைஜ கோரிய போதிலும் பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் அதற்கு எந்தப் பதிலையும் வழங்கவில்லை என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இப்படியான நிலைமையில், அரசாங்கத்தின் கீழ் கூட்டணியில் இருக்க கூடாது என்பது தனது நிலைப்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனடிப்படையில், லங்கா சமசமாஜக் கட்சியின் அடுத்த அரசியல் சபைக் கூட்டத்தில் அரசாங்கத்தில் இருந்து விலகுவது தொடர்பான யோசனையை முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

'மக்களுக்கான பயணத்தை அரசு மேற்கொள்ளாவிட்டால் பங்காளிக் கட்சிகள் மாற்று வழியை நாட வேண்டி வரும் என அரச தலைமைக்கு அவர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

"தேர்தலுக்கு முன்னர் பங்காளிக் கட்சிகளுக்கு இந்த அரசு பல உறுதிமொழிகளை வழங்கியது. அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. எனக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என கூறப்பட்டது. இன்னும் நான் சாதாரண எம். பியாகவே இருக்கிறேன். எனவே மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படா விட்டால் மாற்று வழியை நாடுவோம்." - என்று அவர் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

## ஐ.நா. தேர்வில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலப்பகுதியில் சட்டமா அதிபராகவும், 2013 ஆம் ஆண்டில் பிரதம நீதியரசராகவும் பதவி வகித்தவர் என்ற அடிப்படையில் பொறுப்புக்கூறலையும் நீதியையும் நிலைநாட்டத்தவறிய மொஹான் பீரிஸ், இனப்படுகொலைகள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேச சட்ட ஆணைக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது.

அதுமாத்திரமன்றி ஐ.நாவின் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கு பிலிப்பைன்ஸ் சார்பில் ஹரி ரொக் மற்றும் இலங்கையின் சார்பில் மொஹான் பீரிஸ் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டமையை நிராகரிக்குமாறு வலியுறுத்தி சமூகநீதி மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் பிலிப்பைன்ஸைத் தளமாகக் கொண்டியங்கும் அமைப்பினால் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் சர்வதேச சட்ட ஆணைக்குழுவின் ஆசியபிராந்தியத் திற்குரிய 8 ஆசனங்களுக்கு 11 பேர் போட்டியிட்டனர். அதற்கான தேர்தல் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில், அதில் போதியளவு வாக்குகள் கிடைக்கப்பெறாமல் மொஹான் பீரிஸ் தோல்வியடைந்திருக்கின்றார்.

அவரது தோல்வி குறித்து உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் உள்ளடங்கலாக சர்வதேச சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கு ஆசியபிராந்தியத்தின் சார்பில் இந்தியா, தாய்லாந்து, ஜப்பான், வியட்நாம், சீனா, கொரியா, சைபிரஸ் மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்யவில்லை எனத் தெரிவித்து அதனைக் கண்டித்து நேற்று கோரக்கன்கட்டு கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக ஒன்று திரண்ட மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியமையால் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் தாங்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளமையுடன் அவர்கள் பயன்படுத்தினர் எனக் கருதப்படும் கார் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்வதற்குத் தாங்கள் உடனடி நடவடிக்கை எடுப்பார்கள் எனப் பொலிஸார் நம்பிக்கை தெரிவித்தமையை அடுத்து எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர்.

## மன்னார் பிரதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திகதி - ஏறத்தாழ இரண்டு மாதங்கள் கழித்து - வடக்கின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராசா புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் ரத்துச் செய்திருக்கின்றார்.

மேற்படி தவிசாளருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதி அலுவலர் கந்தையா அரியநாயகத்தின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே முன்னைய உத்தரவை அப்போதைய ஆளுநர் விடுத்திருந்தார்.

இதனையடுத்து புதிய தவிசாளர் தெரிவும் நடைபெற்றிருந்தது. எனினும் முன்னைய ஆளுநரின் அறிவிப்பினால் பதவியிழந்த முஜாஹிர் நீதிமன்றுக்குச் சென்றமையால் புதிய தவிசாளர் தெரிவு பற்றிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இப்போது முன்னைய ஆளுநர் விடுத்த வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யும் புதிய அறிவிப்பை புதிய ஆளுநர் விடுத்திருக்கிறார். எனினும் பழைய ஆளுநரின் தீர்மானத்தை மாற்றும் தமது முடிவுக்கான காரணம் எதனையும் புதிய ஆளுநர் விடுக்கவில்லை. ஆயினும் அவரின் புதிய வர்த்தமானி அறிவித்தலை அடுத்து முஜாஹிர் மீண்டும் தவிசாளர் பதவியில் தொடர்வார் எனத் தெரிகின்றது.

## மன்னாரில் இரு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்பொழுது மன்னாரில் உள்ள காலநிலையி வைரஸ் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலையாகக் காணப்படுகின்றது. மக்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனாத் தொற்று அதிகரிப்புக்குப் பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் ஒன்று கூடி நடமாடுவது, சுகாதார நடை முறைகளைக் கடை பிடிக்காது செயல்படுவது மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் பங்கு கொள்வதும போன்றவை உள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிவர்கள் மாத்திரமே, நாளை திங்கட்கிழமை முதல் வியாபார நிலையங்கள், சந்தைகள், பொது போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றை நடத்தி செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இது தொடர்பில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

மாவட்டத்தில் கடந்த 13 நாள்களில் 292 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது வரை மன்னார் மாவட்டத்தில் 2,685 பேருக்கு இது வரை கொரோனாத் தொற்று எற்பட்டுள்ளது. -என்றார்.

## பட்ஜெட்டை ஆதரிப்பதா? ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் உதய கம்மன்பில வீட்டில் மீண்டும் சந்தித்துக் கலந்துரையாட வுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் குறித்து ஆராயவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்கூட்டத்திலேயே வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்ற தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## முப்பது முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, முன்னாள் ஆளுநர்கள் குழுவிற்கும் உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட இந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா இரண்டு தேர்ந்த மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாநகர சபையொன்றின் முன்னாள் முதல்வர் ஒருவருக்கும் பல வருடங்களாக உயரதிகாரிகள் பாதுகாப்பு வழங்கி வந்த நிலையில், அவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் கடந்த வாரம் நீக்கப்பட்டனர் எனவும் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மக்கள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவில் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு சிறப்புரிமைப் பாதுகாப்பு வழங்குவதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் எதிர்ப்புத் தெரிவித்தது.

எதன் அடிப்படையில் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இவ்வாறு உயரடுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என பின்வரிசையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்கள், பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சர்கள் போன்ற விசேட நபர்களுக்கு முன் பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை இல்லை எனவும், ஆனால் அவ்வாறு இல்லாதவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்கள் சிலர் இந்தத் தேர்ந்த மெய்ப்பாதுகாவலர்களை போராட்டங்களுக்காகவும் தமது வியாபார நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்கின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிடயம்தொடர்பில்உடனடியாக ஆராயவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## புத்தளத்தில் வீதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், உயிரிழந்தவரின் 9 வயது பேரனும், மருமகனும் காயமடைந்த நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் இருந்து வென்னப்புவ, லுணுவில பகுதியை நோக்கி மூவர் பயணித்த வான் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக கட்டுப்பாட்டை இழந்த குறித்த வான் வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வானில் பயணித்த மூவரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரான முறையே தமது மகள், மனைவி, தாயைப் பார்க்கச் சென்று விட்டு வீடு நோக்கிப் பயணம் செய்த வேளையிலேயே இவ்விபத்தில் சிக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கறுப்பு அங்கிக் குற்றவாளிகள்

மனித உரிமைகளை மோசமாக கையாண்ட தமது கொடுஞ்செயலுக்கான வெகுமதியை இலங்கை பெறத் தொடங்கிவிட்டது.

ஐ.நா. தொடர்பான சர்வதேச சட்டங்களை யாக்கும் தகுதி படைத்த சர்வதேச சட்ட ஆணைக்குழுவுக்கான தேர்வில் இலங்கை வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றார். இப்பதவிக்கு இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபரும், முன்னாள் பிரதம நீதியரசரும், ஐ.நாவுக்கான இலங்கையின் தற்போதைய தூதுவருமான மொஹான் பீரிஸை இலங்கை நிறுத்தியது.

சர்வதேச மனித உரிமை விடயங்களில் முன்னணி செயற்பாட்டாளரான ஜஸ்மின் சூக்கா அம்மையாரின் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்ட அமைப்பு வெற்றிகரமாக முன்னெடுத்த பிரசார நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் மேற்படி உறுப்பினர் பதவிக்குத் தெரிவு செய்யப்படாமல் சர்வதேச நாடுகள் புறமொதுக்கி தோல்வியடையச் செய்திருக்கின்றன.

மொஹான் பீரிஸ் 2008 முதல் 2011 வரை இலங்கையின் சட்டமா அதிபராகப் பணியாற்றியவர். இந்தக் காலகட்டத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க அவர் தவறினார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்தவர்கள் தொடர்பாகப் பொறுப்புக்கூறலை நிலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதமை மூலம் அந்தக் குற்றங்களுக்கும், அவற்றை மூடி மறைப்பதற்கும் மொஹான் பீரிஸ் துணை போனார் என்று ஜஸ்மின் சூக்காவின் அமைப்பு வெளிப்படையாகவே குற்றம் சுமத்தியது.

2013 இல் பதவியிலிருந்த பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை அப்போதைய இலங்கை அரசு சட்டவிரோதமான முறையில் குற்றம் சுமத்தி, பலவந்தமாகப் பதவியிலிருந்து துரத்தியது. அந்த இடத்துக்கு முறையற்ற விதத்தில் பிரதம நீதியரசராக வந்து அமர்ந்தவர் மொஹான் பீரிஸ் என்றும், உறுதிபடத் தெரிவித்து, ஜஸ்மின் சூக்கா அம்மையாரின் அமைப்பு மேற்படி ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி விலக்கிய நடவடிக்கை சட்டவிரோதமானது என்றும், இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத்தின் மீது விழுந்த பேரடி அது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அப்போது அறிவித்திருந்தமையை ஜஸ்மின் சூக்காவின் அமைப்பு உலக நாடுகளுக்குச் சுட்டிக்காட்டியது.

நாட்டின் பிரதம நீதியரசராகவும் சட்ட அதிபராகவும் இருந்து கொண்டு முறையற்ற விதத்தில் செயற்பட்ட இத்தகையவர் ஐ.நாவின் சர்வதேச சட்டங்களை யாக்கும் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவர் என்று சூக்கா அம்மையாரின் அமைப்பு முன்னெடுத்த பிரசாரத்தை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டன. அதன்விளைவாக இத்தெரிவில் மொஹான் பீரிஸ் தோற்கடிக்கப்பட்டார்.

இராணுவ, பொலிஸ் சீருடை அணிந்து கொண்டு, மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படையினர் மட்டுமல்லர், நீதி தேவதையின் கறுப்பு அங்கிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, சட்டத்தின் பெயரால் மோசமான மனித உரிமை மீறல்களை சத்தம் சந்தடியின்றி முன்னெடுக்கும் திரிவாலிகளையும் இனி சர்வதேசம் கவனிக்கும் என்பது இதன்மூலம் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

இலங்கை போன்ற நாடுகளில் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு சீருடையினர் மட்டும் காரணமல்லர், அவர்களையும் தாண்டி, அத்தகைய மனித உரிமை மீறல்களுக்குப் பாதுகாப்புத் தருவதோடு, அப்படிப் பாதுகாப்புத் தருவோம் என்ற உறுதிப்பாட்டை அத்தகைய மீறல்களில் ஈடுபடுவோருக்கு தங்கள் தொடர் செயல்கள் மூலமும் நடவடிக் கைகள் மூலமும் வழங்கி நிற்கும் – கறுப்பு அங்கிகளுக்குப் பின்னால் 'நீதி தேவதையின் பெயரில்' ஒளிந்து நிற்கும் – பிரகிருதிகளும் பிரதான காரணமாவர்.

மனித உரிமைகளை மதிக்கும் மேற்கு நாடுகள், சீருடையில் மட்டுமல்லாமல், கறுப்பு அங்கிகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு இவ்வளவு காலமும் மோசமான மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாக இருந்தவர்களையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராகவும் விஸா மறுப்பு மற்றும் தடை நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

உண்மையில் படைச் சீருடையிலும் பார்க்க, நீதி தேவதையின் கறுப்பு அங்கிக்குள் ஒளிந்துகொண்டு மனித உரிமைகள் மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான யுத்தக் குற்றங்கள் போன்றவற்றை மூடி மறைக்கவும், அத்தகைய குற்றங்களுக்குத் துணை போகவும் அனுமதித்து நிற்பவர்களும் மிகப் பயங்கரமான குற்றவாளிகள். அவர்களை உலகம் அடையாளம் கண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமே சர்வதேசத்தில் மனித உரிமைகளை நிலைநிறுத்த முடியும்.

# மாவீரர் மாத புனிதம் பேணுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை



மாவீரர் மாதத்தின் புனிதத்தைப் பேணுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரையான காலப்பகுதி தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான வாரம் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இறந்தவர்களை நினைவுகூரும் நாள்களாக 20 ஆம் திகதியைப் பொதுமைப்படுத்தி வடக்கு கிழக்கு கத்தோலிக்க ஆயர் மன்றம் எடுத்த முடிவு ஆரோக்கியமானதல்ல என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநடவடிக்கை மாவீரர்களின்பெற்றோர்கள், உறவினர்கள்மற்றும்தமிழ்த் தேசிய தாகம் கொண்டவர்களிடத்தில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரையானநாள்களைஅரசியலில் இருந்து மறைக்கவோ திசை திருப்பவோ முடியாது என சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அந்தப் புனித நாள்களைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலித்து வரலாற்றைக் கடத்துவதே வரவேற்கத்தக்க விடயம் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆகவே வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் தமது முடிவை பரிசீலனை செய்து அறிவித்தலை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

# பாடசாலை மாணவர்களின் மீது போதையில்வந்த கும்பல் தாக்கு!



மடுவில் சுமார் 12 பேர் கொண்ட குழுவின் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் நான்கு மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மன்னார், மடு, பெரியபண்டிவிரிச்சான் கிழக்கு பகுதியில் மேலதிக வகுப்பிற்குச் சென்ற 4 மாணவர்கள் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் மது விருந்தில் கலந்து கொண்ட 12 பேர் கொண்ட இளைஞர்கள் குழு, மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது எனப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் குறித்த மாணவர்களுக்கும், சக மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு பாடசாலையின் அதிபரால் சமரசம் செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில், பாடசாலை முடிவடைந்து மேற்படி நான்கு மாணவர்களும் மேலதிக வகுப்பிற்கு சென்றுகொண்டிருந்த நிலையில் சக மாணவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களால்கடுமையாகத்தாக்கப்பட்டுள்ளதுடன், கொலை மிரட்டலும் விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதி மக்கள் காயமடைந்த மாணவர்களை வீடுகளுக்குள் அழைத்துகாப்பாற்றியுள்ளனர்.

அவர்களின் வீட்டை முற்றுகையிட்டு, மேலும் சிலர் வரவழைக்கப்பட்டு வீட்டுக்குள் நுழைந்து மீண்டும் மாணவர்களை தாக்க முற்பட்டுள்ளனர். பாடசாலையில் நடந்த பிரச்சினையின் தொடர்ச்சியாக இப்பிரச்சினை இடம்பெறுவதால் மாணவர்கள் மன்னார் பெரியபண்டி விரிச்சான் மகா வித்தியாலய அதிபரை தொலைபேசியில் அழைத்து சம்பவ இடத்துக்கு வரவழைத்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த அதிபர் அயல் வீட்டவர்களின் பாதுகாப்பிலிருந்த மாணவர்களை வெளியில் அழைத்து மது போதையில் தாக்க வந்த குழுவோடு சமரசம் செய்ய முயற்சித்த நிலையில் அந்த குழுவினர் மீண்டும் மாணவர்கள் மீது சரமாரியாக தாக்கியமையையடுத்து அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மடு பொலிஸ் நிலையத்தில் மாணவர்களால் முறைப்பாடு கொடுக்கப்பட்டமையையடுத்து, முருங்கன் வைத்தியசாலையில் தற்போது தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் வரை யாரும் கைது செய்யப் படவில்லையென்பதுடன், சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நட வடிக்கை எடுத்து பாடசாலை மாணவர்க ளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இலங்கை உள்ளிட்ட மேலும் சில நாடுகளை சிவப்பு பட்டியலிலிருந்து நீக்கியது பஹ்ரைன்


கொரோனா சிவப்பு பட்டியலில் இருந்து இலங்கை உள்ளிட்ட சில நாடுகளை பஹ்ரைன் நீக்கியுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளை பஹ்ரைன் சிவப்பு பட்டியலில் உள்ளடக்கியிருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் சிவப்பு பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன என அந்நாட்டு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ளவர்கள் பஹ்ரைனில் தொழில் அனுமதியைப் பெற முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பருவநிலை ஒப்பந்தத்தில் தடைகளை அகற்றினால் சேரலாம்

## ஈரான் திட்டவட்டம்



தங்கள் நாட்டின் மீதான தடைகளை அகற்றினால்தான் தங்களால் பரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் சேர முடியும் என்று ஈரானின் மூத்த தலைவர் அலி சாலாஜெகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 'ஈரான் மீதான தடைகள், புதுப்பிக்கவல்ல எரிசக்தி போன்ற துறைகளில் நாட்டை முடக்குகின்றது. உலகின் வேறு எந்தப் பகுதியையும் போலவே ஈரானும் பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப் பட்டுள்ளது.

பருவநிலை மாற்றம் வருடாந்திர மழைப் பொழிவை குறைத்துள்ளது. எங்கள் ஆறுகளுக்கு வரும் நீரின் அளவு 40 சதவீதம் குறைந்துவிட்டது. இதனால், எங்கள் விவசாயம், எங்கள் தொழில்துறை, குடிதண்ணீர்த் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒடுக்குமுறை தன்மையுள்ள தடைகள் அமுலில் உள்ள நிலையில், எந்தவிதமான இறக்குமதியும் செய்ய முடிவதில்லை. அடிப்படை மனித உரிமையான மருந்துகளைக் கூட இறக்குமதி செய்ய முடியவில்லை

தடைகள் நீக்கப்பட்டால் சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் கடமைப்பட்டவர்கள். அந்த சூழ்நிலையில் சர்வதேச சமூகம் எங்களுக்கு புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில் நவீன தொழில்நுட்பத்தையும், நிதியையும் எங்களுக்கு அனுப்ப முடியும். இதனால் எங்களால் எங்கள் கட்டமைப்பை நவீனப்படுத்த முடியும்' என கூறினார்.

உலகில் கார்பனை அதிகம் வெளியிடும் நாடுகள் பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ள ஈரான், 2015ஆம் ஆண்டு முதல் கார்பன் உமிழ்வைக் குறைக்கும் திட்டத்தை சமர்ப்பிக்கவில்லை. 2030ஆம் ஆண்டுக்குள் அவற்றின் உமிழ்வு 50 சதவீதமாக அதிகரிக்கலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

# ஏக்வடோர் சிறைச்சாலையில் கலவரம்: 68 பேர் உயிரிழப்பு



தென் அமெரிக்க நாடான ஏக்வடோர் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் குறைந்தது 68 கைதிகள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் போதைப்பொருள் கடத்தல் கும்பல் மற்றும் சிறைக் கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் இறந்தனர் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

நாட்டின் மிகப் பெரிய சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கலவரம் ஆரம்பித்த நிலையில் அதனைக் கட்டுப்படுத்த நூற்றுக்கணக்கான அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டனர்.

இந்நிலையில் தமது சொந்தங்களை இழந்த குடும்பங்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி, மோதலால் இலாபம் ஈட்டும் மாபியாக்களை எதிர்த்துப் போராட புதிய நடவடிக்கைகள் தேவை எனக் கூறியுள்ளார்.

சிறைச்சாலைகள் மட்டுமின்றி, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் காலூன்றியுள்ள ஏக்வடோர் பகுதிகளையும் மீண்டும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாக அந்நாட்டு ஜனாதிபதி உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூடானின் ஆளும் குழு நியமனம்: மேற்கத்திய நாடுகள் அதிருப்தி!



சூடானின் இராணுவத் தளபதி அப்தெல் ஃபத்தா அல்புர்ஹான், இராணுவ சதிப்புரட்சிக்கு தலைமை தாங்கிய சில வாரங்களுக்குப் பிறகு, புதிய ஆளும் குழுவை நியமித்ததற்கு பல மேற்கத்திய நாடுகள் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன

அல்புர்ஹான், 14 உறுப்பினர்களைக் கொண்ட இறையாண்மைக் குழுவை உருவாக்குவதற்கான ஆணையை நேற்று முன் தினம் வெளியிட்டார். தன்னைத் தலைவராகக் கொண்டு, வியாழன் பிற்பகுதியில் பதவியேற்றார்.

அஞ்சப்படும் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படைகளின் தளபதி, ஹெமெட்டி என்றும் அழைக்கப்படும் மொஹமட் ஹம்டன் டகாலோ, சபையின் துணைத் தலைவராக பதவியேற்றார்.

புதிய ஆளும் குழுவில் முந்தைய சபையில் அங்கம் வகித்த மூன்று மூத்த இராணுவப் பிரமுகர்கள், ஐந்து பொது மக்கள் மற்றும் மூன்று முன்னாள் கிளர்ச்சியாளர்கள் உள்ளனர். அவர்கள் பல தசாப்தங்களாக உள்ள உள்நாட்டு மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் முன்னாள் இடைக்கால அரசாங்கத்துடன் ஜூபா சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பிந்தைய மூவரும் இன்னும் பதவியேற்கவில்லை.

'இராணுவத்தின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள், ஒப்புக்கொள்ளப்பட்ட இடைநிலை கட்டமைப்பை நிலைநிறுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது' என்று நோர்வே, ஐக்கிய இராச்சியம்,

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிஸ்லாந்து ஆகிய நாடுகள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

2019இல் நீண்டகால ஆட்சியாளர் உமர் அல்பஷீரை அகற்ற வழிவகுத்த போராட்டங்களை முன்னெடுத்த குடைக் கூட்டணியான சுதந்திரம் மற்றும் மாற்றத்திற்கான படைகளின் பிரதிநிதிகள் சபையில் இருந்து நீக்கப்பட்டனர்.

# நெதர்லாந்தில் பொதுமுடக்கம் அறிவிப்பு!



கொவிட்19 தொற்றுகளின் விரைவான எழுச்சியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், உணவகங்கள் மற்றும் கடைகளை முன்கூட்டியே மூடவும் மற்றும் பார்வையாளர்களை முக்கிய விளையாட்டு நிகழ்வுகளில் இருந்து தடைசெய்யவும் நெதர்லாந்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து நேற்று (சனிக்கிழமை) முதல் நெதர்லாந்து முடக்க நிலைக்குள் இருக்கும். கட்டுப்பாடுகள் மூன்று வாரங்களுக்கு நீடிக்கும்.

இதற்கான அறிவிப்பை நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மார்க் ரூட் வெளியிட்டார்.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனை நிலையங்களும் முன்பே மூடப்படும். சமூக தொலைதூர நடவடிக்கைகள் மீண்டும் விதிக்கப்படும். நான்கு பார்வையாளர்களுக்கு மேல் வீட்டிற்கு வரக்கூடாது என்று அரசாங்கம் பரிந்துரைத்தது. இந்த கட்டுப்பாடுகள் உடனடியாக அமுலுக்கு வருகிறன. அருந்தகங்கள் மற்றும் இரவு விடுதிகள் நேற்று முதல் இரவு 8 மணிக்கு மூடப்படும்.

அதேசமயம் பாடசாலைகள் மற்றும் திரையரங்குகளுக்கு பொதுமுடக்கக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் கொவிட் தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 21ஆவது நாடாக விளங்கும் நெதர்லாந்தில், 2,269,235 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 18,695 பேர் உயிரிழந்துள்ளனர்.

# இந்தோனேசியா எரிபொருள் சேமிப்புக் கிடங்கில் தீ!

இந்தோனேசியாவில் எண்ணெய் நிறுவனத்தின் எரிபொருள் சேமிப்பு கிடங்கில் திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. சிலாகேப் நகரில் உள்ள பெர்டமினா எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் எரிபொருள் சேமிப்பு கிடங்கிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் விபத்துக்கான கரணம் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டதால் பெரிய அளவிலான உயிர் சேதம் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மோடியால் தேசத்தைக் காக்க முடியாது என்பதை மணிப்பூர் தாக்குதல் காட்டுவதாக ராகுல் கருத்து



மணிப்பூரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல், பிரதமர் மோடியால் இந்தத் தேசத்தைப் பாதுகாக்க முடியாது என்பதைக் காட்டுகிறது என ராகுல் காந்தி கடுமையாகச் சாடியுள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் மியான்மர் நாட்டின் எல்லையை ஒட்டிய பகுதியான சூராசந்த்பூரில் நேற்று அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவினரைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் கேணல் விப்லாவ் திரிபாதி, அவரது மனைவி அனுஜா, அவர்களது 6 வயது மகன் அபீர் மற்றும் 4 வீரர்களும் கொல்லப்பட்டனர். மேலும் சில வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச்சம்பவம், அந்தமாநிலத்தையேஉலுக்கியுள்ளது. இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியவர்கள், தனி மாநிலம் கோரி ஆயுதப்போராட்டம் நடத்திவரும் பிரிபாக் என்று அழைக்கப்படுகிற மக்கள் புரட்சிகர அமைப்பு என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தத் தாக்குதலுக்கு இந்தியப் பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து காங்கிரஸ் எம்.பி.யான ராகுல் காந்தி கருத்துக்கூறுகையில், மணிப்பூரில் இராணுவ வாகன அணிவகுப்பு மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல், பிரதமர் மோடியால் இந்தத் தேசத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை மீண்டும் நிரூபணம் செய்துள்ளது. உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் தியாகத்தை தேசம் எப்போதும் நினைவில் வைத்திருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

## டெல்லியை மிரட்டும் காற்று மாசு காரணமாக பாடசாலைகளுக்கு ஒரு வாரம் விடுமுறை



டெல்லியில் நாளைமுதல் ஒரு வாரத்திற்கு பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவித்து அந்தமாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உத்தரவிட்டுள்ளார்.

டெல்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்த முழு முடக்கத்தை அமல்படுத்தலாமா, என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருந்தது. இவ்வாறான சூழலில் மாநில முதல்வர் கெஜ்ரிவால் பாடசாலைகளுக்கு ஒரு வாரம் விடுமுறை அளித்தும், அலுவலக ஊழியர்களை வீட்டிலிருந்தே பணியாற்றவும் அறிவுறுத்தியுள்ளார். டெல்லியில் அடுத்த ஒரு வார காலத்திற்கு எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது எனவும் கெஜ்ரிவால் உத்தரவிட்டுள்ளார்.

## பசுவின் கோமயமும் கோசலமும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும்

### மத்தியப்பிரதேச முதல்வர் கருத்து



பசுவின் கோமயமும் கோசலமும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும் என்று இந்தியாவின் மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

போபாலில் நடைபெற்ற இந்திய கால்நடை மருத்துவ சங்கத்தின் மகளிர் பிரிவு மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரையாற்றிய அவர், பசுக்களின் சாணம் மற்றும் கோமியம் ஆகியவற்றைப் பயன்படுத்த முறையான அமைப்பை ஏற்படுத்தினால், மாநிலம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அது உதவும். அதற்கு திட்டமிட்ட சரியான நடவடிக்கை தேவை. இந்த இரண்டிலிருந்தும் உரம் முதல் மருந்து வரை ஏராளமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மத்தியப் பிரதேச சுடுகாடுகளில் மாட்டுச் சாணத்தால் தயாரிக்கப்படும் வறட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பசுக்களின் மூலம் அதிக இலாபத்தை எப்படிப் பெறுவது என்பது குறித்து கால்நடை மருத்துவர்களும் வல்லுனர்களும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பசுக்கள் மற்றும் காளைகளின் உதவியில்லாமல் பல வேலைகள் நடக்காது. இவற்றின் முக்கியத்துவத்தை அறிந்துதான் கால்நடை பராமரிப்பு மையங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், மக் களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த மையங்களை சிறப்பாக செயல்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

## கழிப்பறையே பயன்படுத்தாத நமக்கு சுகாதார வளாகம் பிரதமர் ஏற்படுத்தியுள்ளார் என எல்.முருகன் பேச்சு



'கழிப்பறையே பயன்படுத்தாத நமக்கு பிரதமர் மோடிசுகாதாரவளாகத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்' என்று இந்திய மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள் ளார்.

விருதுநகர் மாவட்டம ருகே ரோசல்பட்டி என்ற கிராமத்தில் நடந்த காளியம்மன் கோயில் கும்பாபிஷேகத்தில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார். அதனைத்தொடர்ந்து அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றிய எல்.முருகன், "இந்தியாவையும், அதன் கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் காக்கும் விதமா கவும் இந்து சமயத்தில் தங்களுக்கு உள்ள ஈடுபாட்டைக் காக்கவும் சிறிய கோயில்கள் எழுப்பி மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

பிரதமர் மோடி கடைக்கோடி மக்களும் முன்னேறும் வகையில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் கொண்டு வந்துள்ளார். கழிப்பறையே பயன்படுத்தாக நமக்கு சுகாதார வளாகத்தை ஏற்படுத்திக் கொடுத்து ஆரோக்கியத்திற்கு வித்திட்டுள்ளார்" என்று தெரிவித்திருக்கிறார்.

## முல்லைப் பெரியாறு அணை குறித்து

## உண்மைக்குப் புறம்பாக வதந்தி பரப்புவதாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் பதில்



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தைக் குறைக்கக் கோரி தொடர்ந்த மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி கன்வில்கர் தலைமையிலான அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. இன்று காலைதான் தங்களுக்கு இதுகுறித்த தகவல் கிடைத்ததாகவும், எனவே அதற்கு பதிலளிக்க தங்களுக்கு கால அவகாசம் தேவைப்படுவதால் வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் எனவும் கேரள அரசு சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. சமூக வலைத்தளங்களில் முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து தொடர்ச்சியாக தேவையற்ற விதத்தில், உண்மைக்குப் புறம்பாக வதந்தி பரப்புவது பிரசாரமாகவே செய்யப்படுவதாக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. அப்போது, வழக்கின் விசாரணையை நேரடி விசாரணையாக நடத்தவேண்டும் என தமிழக அரசு சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிபதிகள் ஏற்பதாக அறிவித்தனர்.

# கிராமத்திலிருப்பவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடிய வரவு செலவுத் திட்டம்

## விடுதலை புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவிப்பு

இலங்கை நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் கிராமத் திலிருப்பவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடிய வரவு செலவுத் திட்டம் ஆக அமைந்துள்ளது என விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.



மேலும் விவசாய உற்பத்தி விவசாய செய்கைகள் இளைஞர்களுக்கான காணி ஒதுக்கீட்டுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்களால் நாட்டுக்குப் பிரச்சினைகள் இல்லாமல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும். கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.


எமது தலைவரினதும் எங்களதும் எண்ணக்கருவாக அமைவது வரவு செலவுத் திட்டங்களில் எமது துறைகளுக்காக ஒதுக்கப்படும் நிதிகள் மூலம் எமது பிரதேசத்தை முன்னேற்றுவதும் எமது மக்களை முன்னேற்றுவதுமே ஆகும்.

வரவு செலவுதிட்டத்தில் எமக்கு நன்மையளிக்ககூடிய விடயங்களை நாம் பெற்றுக் கொண்டு 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் எமது மக்களின் முன்னேற்ற வலுவை நாம் காட்டவேண்டும்.

எமது மக்கள் பொருளாதாரத்தில முன்னேறவேண்டும் மக்களின் வறுமை ஒழிய வேண்டும் போன்ற எண்ணக் கருக்கமைய அதனைச் செயற்படுத்த எமது முழு முயற்சிகளையும் மேற்கொண்டு அதனைச் செயற்படுத்துவோமென தமிழ் மக்கள் விடுதலைபுலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் கட்சி அலுவலுகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வரவு செலவு திட்டம் தொடர்பாக இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

# தொல்பொருள்களை வைத்திருந்த இளைஞர் அக்கரைப்பற்றில் கைது

பண்டையகால தொல் பொருள்கள் எனச் சந்தேகிக்கப்படும் பொருள்களை தம்வசம் வைத்திருந்த இளைஞனை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.



தேசிய புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வெள்ளிக்கிழமை மாலை அக்கரைப்பற்று போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.பகீரதன் தலைமையில் சென்ற பொலிஸார் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தாண்டியடிப் பகுதியை சேர்ந்தவர் எனவும் 19 வயது மதிக்கத்தக்க இச்சந்தேக நபரிடம் இருந்து தங்க முலாம்பூசப்பட்ட ஆபரணங்கள் அடங்கிய பொருள்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா செடி வளர்த்த பெண் கைது

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ்பிரிவில்கஞ்சாசெடியை வளர்த்து வந்த பெண் ஒருவர் கஞ்சா செடிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள வாழைக்காலை கிராமத்தில் பெண் ஒருவர் தனது காணிக்குள் வளர்த்து வந்த 6 அடி மற்றும் 4 அடி உயரமுடைய இரு கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் காணி உரிமையாளரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுணதீவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக மேற்கொண்ட நடவடிக்கையின்போது கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என வவுணதீவு பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ்.பிரியங்கர தெரிவித்தார். கைது செய்யப் பட்ட நபரையும் கஞ்சா செடிகளையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த உள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

# போதைப் பொருளை வைத்திருந்த பெண்ணுக்கு விளக்கமறியல்

திருகோணமலை,உப்புவெளி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 5 கிராம் ஹேரோயின் போதைப் பொருளை வைத்திருந்த பெண் ஒருவரை இம் மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

சுமேதகம, கண்டி வீதி, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் ஹேரோயின் போதைப் பொருள் விற்பனை செய்து வருகிறார் என உப்புவெளி போதைப்பொருள் குற்றத் தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய 5 கிராம் ஹேரோயின் போதைப் பொருளுடன் அவரைக் கைது செய்ததனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் (வாசஸ்தலம்) முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

# விவசாயிகளுக்கு வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்தில் பயிற்சி

மட்டக்களப்பு வாழைச்சேனை கமநலசேவைபிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நனோ நைட்ரஜன் திரவப் பசளை தொடர்பில் இந்திய பிரதிநிதிகள் விளக்கம் அளிக்கும் நிகழ்வு வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்தில் நடைபெற்றது.

கமநலசேவை உத்தியோகஸ்த்தர் எம்.ஏ.ரசீட் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஜ.எவ்.எவ்.சீ.ஓ. இந்திய நிறுவனத்தின் விவசாய சேவைப் பிரிவின் தலைமை அதிகாரி டாக்டர் ரெருண்டு சிங் குறித்த நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்போது விவசாயிகளுக்கு நனோ நைட்ரஜன் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதனையடுத்து வாழைச்சேனை கமநல சேவை பிரிவிற்குட்பட்ட அடம்படி வட்டவான் வயல் பிரதேசத்தில் நனோ நைட்ரஜன் திரவப் பசளை விசிறல் நடவடிக்கை முன்னெடுக்கபட்டது.

இவ் நனோ நைட்ரஜன் வயல் வெளி யில் விசிறும்போது பாதுகாப்பு அங்கி பயன்படுத்தத் தேவையில்லை என்றும் காற்றில் வேகம் அதிகரிக்கும் போது முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது என்று விளக்கமளிக்கப்பட்டது.

இதற்கான விலை விவரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இந்தியாவில் 14 விவசாய ஆராய்ச்சி பல்கலைக் கழகங்கள் 14 ஆயிரம் விவசாயிகள் மத்தியிலும் 94 வகையான பயிர் வகைகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதிக விளைச்சலை பெற்றுக் கொண்டதாகவும் பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது என்றும் விளக்கமளிக்கபட்டது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மஹேல ஜயவர்த்தனவுக்கு ஐ.சி.சி.யின் உயர் கௌரவம்








இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரருமான மஹேல ஜயவர்த்தனவுக்கு சர்வதேச கிரிக்கெட் சபையினால் (ஐ.சி.சி.) உயர் கௌரவமாக வழங்கப்படும் ஐ.சி.சி. வரலாற்று நாயகர்கள் (Hall of Fame) என்ற விருதுப்பட்டியலில் இணையும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மஹேலஜயவர்த்தனவுடன் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ரோன் பொலொக் மற்றும் இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீராங்கனை ஜனேட் பிரிட்டின் ஆகியோரையும் தமது வரலாற்று நாயகர்கள் பட்டியலில் ஐ.சி.சி. புதிதாக இணைத்துள்ளது.

மொத்தம் 652 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மஹேல ஜயவர்த்தன விளையாடியுள்ளார். அவற்றில் 149 டெஸ்ட் போட்டிகள், 448 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 55 ரி-20 போட்டிகள் அடங்குகின்றன. சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்து அதிக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இரண்டாவது வீரராக மஹேல உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டிகளில் 49.84 என்கின்ற துடுப்பாட்டச் சராசரியுடன் மொத்தமாக 11,184 ஓட்டங்களை எடுத்திருக்கும் மஹேல ஜயவர்த்தன, டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களைச் சேர்த்த துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் 9 ஆம் இடத்தில் இருக்கின்றார். 34 டெஸ்ட் சதங்களை எடுத்திருக்கும் அவர் டெஸ்ட் போட்டிகளில் அதிக சதங்கள் பெற்ற வீரர்கள் வரிசையில் 6ஆம் இடத்திலுள்ளார். இந்தச் சதங்களுக்குள் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 2006ஆம் ஆண்டில் ஓர் இன்னிங்சில் பெற்ற 374 ஓட்டங்களும் அடங்குகின்றன.

2007 மற்றும் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் உலகக் கிண்ணத்தொடர்களில் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இலங்கை அணியில் மஹேல ஜயவர்த்தன இடம்பெற்றிருந்தார். 2009, 2012ஆம் ஆண்டுகளில் நடைபெற்றிருந்த ரி-20 உலகக் கிண்ணத் தொடர்களில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய இலங்கை அணியில் விளையாடிய மஹேல, 2014ஆம் ஆண்டில் இலங்கை முதல் தடவையாக ரி-20 உலகக் கிண்ணத்தினை வெற்றி கொண்ட போதும் அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப் பிடத்தக்கது. கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரோடு சர்வதேச கிரிக்கெட் போட்டிக ளிலிருந்து ஓய்வுபெற்ற மஹேல ஜயவர்த்தன, தற்போது கிரிக்கெட் பயிற்சியாளராகவும் ஆலோசகராகவும் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சீசெல்ஸ் அணியுடனான போட்டியில் தோல்வியடைந்தது இலங்கை அணி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் நான்காவது லீக் போட்டியில் இலங்கை அணியை 1-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி கொண்டு, தொடரில் தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்த இலங்கை வீரர்கள் அடுத்தடுத்து கோலுக்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் போட்டியின் இறுதி நிமிடம்வரை இலங்கை



தமது முதல் வெற்றியை சீசெல்ஸ் அணி பதிவு செய்தது. நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே இலங்கை அணி மிகச் சிறப்பாக விளையாடியபோதும் கோலெதனையும் பெறமுடியாது தோல்வியைச் சந்திக்க நேர்ந்தமை ஏமாற்றமே. போட்டியின் முதல் பாதியில் எந்த அணியும் கோல்களை அடிக்காத நிலையில், இரண்டாம் பாதி ஆரம்பித்து 20 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோனர் கிக் வாய்ப்பினைப் பயன்படுத்தி சீசெல்ஸ் அணி கோலொன்றைப் பெற்றுக் கொண்டது.

பார்வையாளர்களின் கோத்திற்கு மத்தியில் வீரர்களுக்கு கோலடிப்பாதற்கான வாய்ப்பை சீசெல்ஸ் அணியினர் வழங்கவில்லை. ஆட்ட நிறைவில் 1-0 என சீசெல்ஸ் வெற்றி பெற்றது.

இலங்கை, பங்களாதேஷ், சீசெல்ஸ், மாலைதீவுகள் அணிகள் விளையாடும் இந்தத் தொடரில் நான்கு அணிகளும் இரண்டு போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில், இலங்கையணியும் மாலைதீவுகளும் தலா ஒன்றைச் சமப்படுத்தியதோடு மற்றொன்றில் தோல்வியடைந்துள்ளன. பங்களாதேஷ் அணியும் சீசெல்சும் தலா ஒவ்வொரு சமநிலை முடிவையும் ஒவ்வொரு வெற்றியையும் பெற்றுள்ளன.

## உலக மகளிர் டென்னிஸ் தொடர் கோன்டாவெய்ட் அரையிறுதியில்

*உலகின் முதல் நிலையிலுள்ள 8 வீராங்கனைகள் மட்டும் பங்கேற்றுள்ள உலக மகளிர் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி மெக்சிகோவில் உள்ள குவாடலஜரா நகரில் நடந்து வருகிறது. 8 வீராங்கனைகள் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் மோதுகிறார்கள். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிப்பவர்கள் அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.*

*இந்தப் போட்டியின் மூன்றாவது நாளில் நடந்த ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 8 ஆவது இடத்தில் இருக்கும் எஸ்தோனியாவைச் சேர்ந்த அனெட் கோன்டாவெய்ட் தனது இரண்டாவது லீக் ஆட்டத்தில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான செக்குடியரசைச் சேர்ந்த கரோலினா பிளிஸ்கோவாவை எதிர்கொண்டார்.*

*57 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் கோன்டாவெய்ட் 6:4, 6:0 என்ற நேர்செட்டில் பிளிஸ்கோவாவை வீழ்த்தி தொடர்ச்சியாக இரண்டாவது வெற்றியைப் பெற்று அரையிறுதியையும் உறுதி செய்தார். சர்வதேச போட்டியில் தொடர்ந்து 12 வெற்றிகளை குவித்துள்ள கோன்டாவெய்டுக்கு, பிளிஸ்கோவாவுடன் நான்காவது முறையாக மோதியதில் பெற்ற முதல் வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது.*

*மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 5 ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஜா, பிரெஞ்ச் ஓபன் சம்பியனும், 3 ஆம் நிலை வீராங்கனையுமான செக்குடியரசைச் சேர்ந்த பார்போரா கிரெஜ்சிகோவாவுடன் மோதினார். 2 மணித்தியாலங்கள் 10 நிமிடங்கள் வரை நீடித்த பரபரப்பான இந்த ஆட்டத்தில் முகுருஜா தனக்கு ஏற்பட்ட சரிவைச் சமாளித்து 2-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் கிரெஜ்சிகோவாவை வீழ்திதி முதல் வெற்றியைத் தனதாக்கினார். கிரெஜ்சிகோவாவுக்கு இது இந்தத் தொடரில் இரண்டாவது தோல்வியாகும்.*







# விபத்துக்களை குறைப்பதற்கு சாரதிகளுக்கு 2 வாரப் பயிற்சி

நாளுக்கு நாள் அதிகரிக்கும் வீதி விபத்துக்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்கில் வீதி ஒழுக்கம் தொடர்பில் சாரதிகளுக்கு விசேட பயிற்சி வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில் இடம்பெற்ற பொது மக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை இடம்பெற்ற வீதி விபத்துக்கள் காரணமாக 1,948 உயிர்களை இழந்திருப்பதாவும், கடந்த 10 வருடங்களில் சுமார் 27 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் எனக் குறிப்பிட்ட அமைச்சர் சரத் வீரசேகர, வீதி ஒழுங்குகளை பாதுகாக்கும் வகையில் இலங்கை பொலிஸ் உள்ளிட்ட நிறுவங்களின் பங்களிப்பில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

தண்டப்பணம் செலுத்தும் முறையில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள உடனடியாக தண்டப்பணம் செலுத்தும் முறை மற்றும் சாரதி மதிப்பெண் முறையை விரைவில் அறிமுகப்படுத்துவதாகவும், இதற்கான துரித வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு சாரதிகளின் ஒழுக்கமின்மை பிரதான காரணங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்நிலையை தவிர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றின் தேவை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் குழுவில் முன்வைக்கப்பட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த வாகன ஒழுங்குறுத்துகை, பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரயில் பெட்டிகள், மோட்டார் வாகன கைத்தொழில், சமூகப் பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, வீதி ஒழுங்குகள் தொடர்பில் சாரதிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று திட்டமிடப்பட்டுள்ளதாகவும் நிலவும் கொவிட் சூழலில் அது தாமதமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதற்கமைய அதன் முதற்படியாக மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சாரதிகளுக்கு 2 வார பயிற்சியை விரைவில் ஆரம்பிப்பதாகவும் திலும் அமுனுகம தெரிவித்தார். இதுவரை மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சாரதிகள் சுமார் 17 ஆயிரம் பேர் சேவையாற்றுகின்றனர் எனவும், அடிக்கடி இடம்பெறும் பஸ் விபத்துக்கள் தொடர்பில் அவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளோ ஆர்ப்பாட்டங்களோ இன்றி மிகக் கடினமான நிலையில் பணியாற்றும் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் மற்றும் சம்பளம் வழங்குவதன் அவசியம் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

கடந்தகொவிட்நிலைமையில்பொலிஸ்உத்தியோகத்தர்கள் 15 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டமையுடன், 44 பேர் உயிரிழந்தனர் எனக் குறிப்பிட்ட அமைச்சர், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுப்பது தொடர்பில் தனது நன்றியைத் தெரிவித்தார்.

குற்றச்செயல்கள் தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடும் போது பொலிஸார் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுவது சிக்கலானது என்பதால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

குழுவின் உறுப்பினர்களான, அகில எல்லாவல, பிரமித்த பண்டார தென்னகோன் மற்றும் ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, சந்திம வீரக்கொடி, அஜித் ராஜபக்ஷ, மதுர விதானகே, குணதிலக ராஜபக்ஷ, முதிதா டி. சொய்சா, மஞ்சுளா திசாநாயக்க, உதயன கிரிந்திகொட, டயனா கமகே, சுதத் மஞ்சுள, அனுப பஸ்குவல், மேஜர் சுதர்ன தெனிபிடிய ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# இயற்கை அனர்த்தம் 106 பேர் பலியாகினர்!

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ தகவல்



இந்த வருடத்தில் இதுவரை இயற்கை அனர்த்தங்களால் மொத்தமாக 106 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும், கடந்த வருடம் இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வருடத்தில் இதுவரை சுமார் 23 ஆயிரத்து 119 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், கடந்த ஆண்டு சேதமடைந்த மொத்த வீடுகள் 29 ஆயிரத்து 584 எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் ராஜிகா விக்ரமசிங்க முன்வைத்த ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போது, பதிலளித்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கேகாலை மாவட்டத்தில் உள்ள பத்து பிரதேச செயலர் பிரிவில் 546 குடும்பங்களைச் சேர்ந்த 1895 பேர் கடந்த இரண்டு வாரங்களில் சீரற்ற கால நிலை காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 104 பேர் நான்கு மையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர் எனவும் கேகாலை மாவட்டத்தில் எட்டு வீடுகள் முழுமையாகவும் 278 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேதம் அடைந்த வீடுகளுக்கு முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும். மாவட்ட செயலகங்களுக்கு தேவையான நிதி தற்போது அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.



# தேங்காயின் விலை எகிறல்!

சந்தையில் தற்போது தேங்காய்க்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கொழும்பு மாவட்டத்தில் தேங்காய் ஒன்று 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது, கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் தேங்காய்க்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

தொடர் மழை காரணமாக தேங்காய் மட்டையை அகற்றுதல் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய் தட்டுப்பாடு காரணமாக அதன் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேங்காய் பாலில் பட்டர் தயாரிப்பு!

இலங்கையில் வித்தியசமான முறையில் பட்டர் தயாரிக்கும் முயற்சி வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேங்காய் பாலில் இருந்து பட்டர் தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சி வெற்றியடைந்துள்ளதாக தென்னை ஆராய்ச்சி சபை தெரிவித்துள்ளது.

பட்டர் உற்பத்தியின் ஆரம்பக் கட்ட பணிகள் வெற்றியடைந்துள்ளமையுடன், சந்தையிலும் இதற்கு அதிக கோரிக்கை விடுக்கப்படும் என சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தேங்காய் பாலில் இருந்து ஜாம் போன்றவை தயாரிக்கப்படுகின்றன எனவும், எதிர்காலத்தில் சீஸ் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பொருள்களுக்கு உலகில் புதிய சந்தையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் கடற்கரையில் யுவதி சடலமாக மீட்பு!

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள கோந்தைபிட்டி கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை சடலமாக கரை ஒதுங்கிய யுவதி, மன்னார் பஸ் தரிப்பு நிலையத்தில் இளைஞர் ஒருவருடன் நடந்து வருகின்ற சி.சி.ரி.வி. காட்சி வெளியாகியுள்ளது.





குறித்த காட்சி கடந்த வியாழக்கிழமை மாலை பதிவாகி உள்ளது.

யுவதியும், இளைஞன் ஒருவரும் முகக்கவசம் அணிந்து நடந்து வருகின்ற காட்சி பதிவாகி உள்ளது.

இந்த நிலையில் வியாழக்கிழமை மாலை 7 மணி அளவில் மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பெண் ஒருவர் கடலில் குதித்தார் என நேரில் கண்ட மீனவர் ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்த நிலையில் பொலிஸாரும், கடற்படையினரும் உடனடியாகத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிய வந்துள்ளது.

எனினும் எவரும் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை யுவதி ஒருவர் கோந்தை பிட்டி கடற்கரை பகுதியில் சடலமாக கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார். எனினும் இது வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2021இல் வெளியிடப்பெற்றது.